**CC.NO. 139/2023** தேதி**: 16.03.2026**

**<u>அசா 2 திரு. முனியாண்டி த/பெ வெங்கடேசன் மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

இவ்வழக்கின் புகார்தாரர் எனது நண்பரா என்றால் இல்லை. எனது வீட்டிலிருந்து அண்ணா நகரிற்கு எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 1/2 கிமீ இருக்கும். வழக்கமாக அண்ணாநகரிற்கு வர வேண்டிய வேலை இல்லை என்றால் நான் அங்கு தான் எனது வண்டியை நிறுத்தி வைப்பேன். போலீசார் என்னிடம் காவல்நிலையத்தில் வைத்து தான் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் இல்லை. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் சொன்ன நேரத்தில், இடத்தில் வைத்து கையொப்பம் செய்ய வில்லை என்றால் சரியல்ல. புகார் தாரர் முருகன் எனது நண்பன் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

**ஒப்பம்** - S.T. **கனிமொழி**.,
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.

**CC.NO. 139/2023** தேதி**: 16.03.2026**

**<u>அசா 3 திரு. குபேந்திரன் த/பெ கணேசன் மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

எனது வீடு காந்திஜி நகர், ரயிலடியில் உள்ளது. எனது வீட்டிற்கும் அண்ணா நகரிற்கும் எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் சுமார் 2 1/2 கிமீ துாரம் இருக்கும். அசா1 முருகன் எனது நண்பரா என்றால் இல்லை. போலீசார் என்னிடம் காவல்நிலையத்தில் வைத்து தான் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் இல்லை. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் சொன்ன நேரத்தில், இடத்தில் வைத்து கையொப்பம் செய்ய வில்லை என்றால் சரியல்ல. புகார் தாரர் முருகன் எனது நண்பன் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

**ஒப்பம்** - S.T. **கனிமொழி**.,
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.